பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 07 2026 SUNDAY 7.15 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்தை அரசு கொள்கையாக கொண்டு பாகிஸ்தான், செயல்படுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

3. எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. பாகிஸ்தானில் மழை வெள்ளத்தால் கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

5. இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஜிம்பாப்வே வெற்றிபெற 193 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த கிராம திட்டத்தின்கீழ், நாடு முழுவதிலும் இருந்து பங்கேற்ற 400-க்கும் மேற்பட்ட இளையோருடன் காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கிராமங்களின் வளர்ச்சி, வளர்ச்சியடைந்த இந்தியாவை உறுதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைப்பகுதிகளில் உள்ள கிராமங்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் புறக்கணிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தற்போது அப்பகுதிகளில் வளர்ச்சியை உறுதி செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

எல்லைப்பகுதிகளில் உள்ள கிராம மக்களின் நாட்டுப்பற்று போற்றுதலுக்குரியது என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த திட்டத்தின்கீழ், காஷ்மீர் சென்றது மறக்க இயலாத அனுபவத்தை வழங்கியதாக தமிழகத்தின் திண்டுக்கல்லை சேர்ந்த மாணவி காவியா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

தீவிரவாதத்தை அரசு கொள்கையாக கொண்டு பாகிஸ்தான், செயல்படுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

கார்கில் வெற்றி தினத்தையொட்டி, இன்று லடாக்கின் Dras-ல் உள்ள போர் நினைவுச்சின்னத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடியை இந்தியா கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு தீங்கு விளைவிக்க பாகிஸ்தான் முயற்சித்தால், கற்பனை செய்ய முடியாத அளவிற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் திரு ராஜ்நாத் சிங் எச்சரித்தார்.

<<<<<<>>>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக புதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமக்கு கூடுதல் பொறுப்பாக கல்வித்துறையை வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார்.

கல்வித்துறையின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

வருமானவரித்துறை அதிகாரிகள் மக்கள் சிரமங்களை எதிர்கொள்ளாத வகையில் தங்களது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று மும்பையில் புதிதாக கட்டப்பட்டுள்ள வருமானவரி அலுவலக வளாகத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், எரிசக்தித் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் சீரிய தலைமைத்துவத்தின் கீழ் இந்த சீர்திருத்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் உள்நாட்டு எரிசக்தி உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், எரிசக்தித் துறையில் இந்தியா வலிமைமிக்க நாடாக உருவெடுக்கும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நாடாளுமன்ற ஜனநாயக நடைமுறைகளுக்கு வலுசேர்க்கும் வகையில் செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்காக புதுதில்லியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்கேற்று அவர் பேசினார்.

அவை நெறிமுறைகள் குறித்து அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார்.

<<<<<<>>>>>>>

அஸ்ஸாமின் வெள்ள பாதிப்பு குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து கேட்டறிந்து வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக, பிரதமர் இன்று தம்மை தொலைபேசியில் தொடர்புகொண்டு பாதிப்பு குறித்து கேட்டறிந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அஸ்ஸாம் முதலமைச்சருடன் பிரதமர் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதையும் திரு சர்பானந்த சோனாவால் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்று மணிப்பூர் ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா கூறியுள்ளார்.

இன்று இம்பாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மணிப்பூரில் அமைதியும், நல்லிணக்கமும் நீடிக்க அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு அஜய்குமார் பல்லா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அரசு போக்குவரத்து சேவையை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

இன்று ஜெய்பூரில் 144 புதிய பேருந்துகளின் சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் மக்களுக்கு குறைந்த செலவில் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

கர்நாடக சட்டப்பேரவைக்கு அடுத்த இரண்டாண்டுகளில் நடைபெறவுள்ள தேர்தலில தாம் போட்டியிடப் போவதில்லை என்று அம்மாநில முன்னாள் முதலமைச்சர் திரு சித்தராமையா கூறியுள்ளார்.

மாண்டியாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வயது மூப்பு காரணமாக தாம் இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இருப்பினும், அரசியலில் ஆக்கப்பூர்வமாக தொடர்ந்து பணியாற்றப் போவதாகவும் திரு சித்தராமையா தெளிவுபடுத்தினார்.

<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ராவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை 87 சதவீத விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு எஸ். சொக்கலிங்கம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுவரை 60 சதவீத விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் Kanwar யாத்திரைக்கான விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

மீரட் மண்டலத்தில் மட்டும் நான்கு தற்காலிக காவல் நிலையங்களும், 56 தற்காலிக சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்படும் என்று காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

யாத்திரை தொடங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் இவை செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இன்று அமர்நாத் யாத்திரைக்காக புறப்பட்டு சென்றனர்.

ஜம்மு முகாமிலிருந்து, 166 வாகனங்களில் பலத்த பாதுகாப்புக்கு இடையே அவர்கள் புறப்பட்டு சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

பாகிஸ்தானில் மழை வெள்ளத்தால் கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்துக்கு உட்பட்ட பகுதியில் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் 193 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் ஜிம்பாப்வே சற்றுமுன்வரை 8.5 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 72 ரன் எடுத்துள்ளது.

ஹராரேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன் எடுத்தது.

Vaibhav Sooryavinshi அதிரடியாக ஆடி 49 பந்துகளில் 81 ரன் குவித்தார்.

Brad Evans 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

<<<<<<>>>>>>>

உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி சுவிட்சர்லாந்தில் நடைபெற உள்ள மூன்று நாள் தீவிர பயிற்சி முகாமில் பங்கேற்க உள்ளது.

இப்போட்டி நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Hansini Mathan வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>>>>

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் Leon Luke Mendonca முதலிடத்தில் இடத்தில் உள்ளார்.

<<<<<<>>>>>>>

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் பட்டம் வென்ற இந்தியாவின் அனாகத் சிங்கிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>